பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 14 புதன்கிழமை 29.12.2021 கதிர் 282

## அனலைதீவில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(ந.லோகதயாளன்)

அனலைதீவில் பாம்பு தீண்டியதால் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் வீடு திரும்பி பத்து நாள்களின் பின் உயிரிழந்துள்ளார்.

அனலைதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கார்த்திகேசு ரவீந்திரன் (வயது -47)

# 2022இல் பெரும் சவாலை எதிர்நோக்கக்கூடும் அரசு

## அமைச்சர் தினேஷ் எச்சரிக்கை



கொரோனா வைரஸ் சூழ்நிலையால் அடுத்த வருடத்தில் அரசு பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொடுத்தல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

## 3 மாணவர்களுடன் கால்வாயில் விழுந்தது மோட்டார் சைக்கிள்!

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்

மரமொன்றில் மோதிய மோட்டார் சைக்கிள் கால்வாயில் விழுந்ததில் 13 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், மேலும் இரு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தம்புள்ளை, களுந்தாவ பரணகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனத் தம்புள்ளை பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புள்ளை, பஹல அரவுல பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா தினேஷ் சத்சர ஏகநாயக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த 15 மற்றும் 16 வயதுடைய

# அரசு மீது மக்கள் கடும் கோபத்தில்!

## சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு ரணில் வலியுறுத்து



நாட்டு மக்கள் அனைவரும் அரசின் மீது கடும் கோபத்தில் இருக்கின்றனர் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், நாட்டில் டொலர் பற்றாக்குறை, வேலைவாய்ப்பு இன்மை, விவசாயிகள் பிரச்சினைகள் காணப்படுகின்றன

## ராஜபக்ஷக்களால் பேரழிவு!

### சம்பிக்க கடும் தாக்கு



இலங்கையை முப்பது ஆண்டு காலத் போரில் இருந்து விடுவித்ததாகக் கூறிய ராஜபக்ஷவினர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விட நாட்டுக்கு மிக மோசமான பேரழிவைத் தேடித் தந்துள்ளனர்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க

## ஜனவரி 2 இல் டுபாய் பறக்கிறார் மஹிந்த!



உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் 2 ஆம் திகதி டுபாய் செல்லவுள்ளார்.

ஜனவரி 3 ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள பிரதமர் மஹிந்த

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருவருக்குப் பேராசிரியர் நியமனம்





யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தால் மேலும் இரண்டு பேருக்குப் பேராசிரியர் பதவியை வழங்குவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை

## நடமாடும் சேவை

நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் விசேட நடமாடும் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய, வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு, எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில், பொதுமக்களைப் பாதிக்கும் சட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு

## போதையில் கடமையிலிருந்த இரு பொலிஸார் பணி நீக்கம்

கடமையின்போது போதையில் காணப்பட்ட கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி

## புதிய கூட்டணிக்கு திலகர் தீவிர முயற்சி




மலையக அரசியலை மையப்படுத்தி - தேசிய அரசியலையும் இலக்கு வைத்து புதியதொரு கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தீவிர கவனம் செலுத்தியுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து

### அனலைதீவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி வீட்டு முற்றத்தில் நின்றிருந்தபோது இனந்தெரியாத வகை பாம்பு ஒன்று அவரைத் தீண்டியுள்ளது.

அதற்குச் சிகிச்சை பெற்று மறுநாள் அவர் வீடு திரும்பியுள்ளார். பின் கடந்த 26ஆம் திகதி அவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டமையால் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருந்தபோதிலும் அவர் சிகிச்சை பலனளிக்காமையால் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### 2022 இல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏனைய மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக சிறந்த முகாமைத்துவத்துடனான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

### 3 மாணவர்களுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாடசாலை மாணவர்கள் இருவரும் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த மாணவர்கள் நண்பன் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

### அரசு மீது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில், பல நாடுகள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பொருளாதார முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, தற்போதைய அரச சர்வதேச நாணய நிதியத்தை நாடி உதவி பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று வழியை முன்வைக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

எதிர்வரும் புத்தாண்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் கடும் கோபம் ஏற்படும் என்றும், அது அரசைப் பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ராஜபக்ஷக்களால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தை விட மிக மோசமான அனர்த்தம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசில் இருக்கும் பலரும், ராஜபக்ஷ வினருக்கு வாக்களித்தவர்களும் இந்த அழிவைப் புரிந்துகொண்டுள்ளனர்.

நாட்டை மிக மோசமான நிதி நெருக்கடி நோக்கிக் கொண்டு சென்றவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் என்பது உலகத்துக்குத் தெளிவாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாகி பல மாதங்கள் முக்கிய அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிக்க முடியாமல் போனது.

இதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல ஜனாதிபதி தயாரில்லை என்பது தெளிவானது - என்றார்.

### யாழ்ப்பாணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒப்புதல் அளித்துள்ளது.

பகிரங்க விளம்பரத்துக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்காக விண்ணப்பித்த யாழ். போதனா வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகன் உளநலப் பேராசியராகவும், திறமை அடிப்படையிலான உள்ளகப் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்திருந்த இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேசலிங்கம் சசிகேஸ் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி வழங்கப்படுவதற்கே பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்த கூட்டம் இன்று புதன்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கமைவான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து நேர்முகத் தேர்விலும் சித்தியடைந்த கலாநிதி க.சசிகேஸ், உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகன் ஆகியோரின் பதவியுயர்வுக் குறிப்புகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, பேரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

### போதையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று நண்பகல் கொடிகாமம் பகுதியில் கடமையில் ஈடுபட்டனர். இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனையில் அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து குறித்த இருவரிடமும் சாவகச்சேரி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் குற்றம் உறுதியான நிலையில் இருவரும் மறு அறிவித்தல் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### நடமாடும் சேவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளக்கமளிக்கப்படவுள்ளதுடன், நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருள் பாவனை, காணிப் பிரச்னைகள் தொடர்பிலும் இந்த நடமாடும் சேவையினூடாக ஆலோசனை வசதிகள் வழங்கப்படும் அதேவேளை வேலைவாய்ப்பைப் பெறுதல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### புதிய கூட்டணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறியமுடிகின்றது.

இதன் ஆரம்பக்கட்ட நகர்வாகவே 'மலையக அரசியல் அரங்கம்' எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார். தற்போது ஆசிரியர்கள், இளைஞர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலதரப்பு சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்.

இதில் சிலரிடம் மட்டும் தனது அரசியல் பயணம் குறித்து பேசி வருவதுடன், ஏனைய தரப்பிடம் சிவில் சமூக செயல்பாடுகள் குறித்து மட்டும் பேசி வருகின்றார் எனவும் தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், தேசிய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்ந்த வருவதாகத் தெரியவருகின்றது.

எனினும், இந்த முயற்சிகளுக்குத் தேசிய தொழிலாளர் சங்க செயற்பாளர் மத்தியில் கடுமையான எதிர்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

எனினும், திலகராஜ் போன்ற படித்த சமூகம் மலையக அரசியலில் அங்கம் வகிப்பது முக்கியமானது என அவருக்கு நெருக்கமான தரப்புக்கள் எதிர்பார்த்துள்ளன.

### ஜனவரி 2 இல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ளார் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பயணத்தின்போது பிரதமருக்கும் டுபாய் அரச தலைவர்களுக்கும் இடையில் விசேட பேச்சுகள் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சீனாவின் நம்பிக்கையை எதிர்க்கட்சி வென்றுள்ளது

## சஜித் பெருமிதம்



ஐக்கிய மக்கள் சக்தியின் மருத்துவ உப கரண நன்கொடை திட்டமான 'ஹஸ்மாக்'க்கு சீன அரசாங்கம் 19.6 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியது.

சீனத் தூதுவர் குய் ஜென்ஹொங்கிடமிருந்து நன்கொடையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டார். சிறு நீரக நோயாளர்களுக்கான டயாலி சிஸ் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

ஒரு வெளிநாட்டுத் தூதரகம் எதிர்க்கட்சிக்கு நிதி வழங்குவது இதுவே முதல் முறை எனக் குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, சீனாவின் நம்பிக்கையை தம்மால் வெல்ல முடிந்துள்ளது என்றும் பெருமிதம் வெளியிட்டார்.

கொரோனா தொற்று பரவலை அடுத்து நாடளாவிய ரீதியில் உள்ள 34 வைத்திய சாலைகளுக்கு 101 மில்லியன் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை நன்கொடை யாக வழங்கியுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ கூறினார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# புரியாமல் நடக்கும் திருவிழா

"குருடன் யானை பார்த்த கதை" என்பார்கள். அது மாதிரி இருக்கின்றது 'ஒரு நாடு; ஒரு சட்டம்' தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கை.

நாட்டு மக்கள் அனைவரையும் குருடர்களாகக் கருதி, அவர்களுக்கு யானை காட்டிக் கொண்டு இருக்கின்றது கோட்டா நிர்வாகம். அவரவர்கள் தாங்கள் தொட்டுணர்ந்த கணக்கில் அது குறித்து விமர்சித்துக் கொண்டிருக் கின்றார்கள்.

'ஒரு நாடு; ஒரு சட்டம்' என்ற திட்டம் குறித்து ஆராய்வதற் காக ஒரு ஜனாதிபதி செயலணியையும் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ நியமித்திருக்கின்றார். தமது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு நடவடிக்கைகளி னாலும், திமிர்த்தனத்தினாலும் சர்ச்சைக்குரியவராக அடையாளம் காணப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரரை அதற்கு – அந்த செயலணிக்கு – தலைவராக நியமித்தி ருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த ஞானசார தேரரை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தில் மன்னிப்பு அளித்து விடுவித்தார். வெளியே வந்ததும் மீண்டும் தமது கைவரிசையைக் காட்டி இன்னொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அவர் சிக்கியுள்ளார்.

அவரைத்தான், தேடிப் பொறுக்கி எடுத்து மேற்படி செயலணிக்குத் தலைவராக்கியிருக்கின்றார் இப் போதைய ஜனாதிபதி கோட்டாபய.

அந்த நியமனம் ஜனாதிபதி செயலணித் தலைமைதான். ஜனாதிபதி ஆணைக்குழுத் தலைவர் அல்லர். ஜனாதி பதி செயலணித் தலைவர் பதவி என்பது ஜனாதிபதிக்கு சில ஆலோசனைகளை – பரிந்துரைகளை – வழங்கும் ஓர் அமைப்பு மட்டும்தான். அதன் தலைவர் என்ற முறையில் சில வசதி, வாய்ப்புகள் ஞானசார தேரருக்கு உள்ளன. அதனைத் தவிர, வேறு பெரிய அதிகாரங்கள் ஏதும் இல்லை. ஆனாலும் ஏதோ அதிகாரத்தின் உச்சியில் நிற்கின்றவர் போல அவர் துள்ளிக் குதிக்கின்றார். அது, அவரது பண்பியல்பு. தவிர்க்க முடியாத பரவணிப் பழக்க வழக்கம்.

இந்தச் செயலணி நியமனத்தில் முதல் பிரச்சினை அதுவல்ல. செயலணி நியமிக்கப்பட்டாயிற்று. தமிழர்க ளுக்கு அதில் இடமில்லை என்று விமர்சிக்கப்பட்டதும் ஓரிரு தமிழர்களும் அதில் சேர்க்கப்பட்டு விட்டனர். செய லணியும் மாவட்டம் மாவட்டமாகப் போய் மக்களைச் சந் திக்கின்றது. அவர்களின் கருத்துக்களை செவிமடுத் தல் என்ற பெயரில் மாவட்டம் தோறும் 'திருவிழாக்கள்' ஒழுங்காக நடக்கின்றன. ஆங்காங்கே இத்தகைய மக் கள் சந்திப் புக்களில் செயலணித் தலைவர் பிதற்றும் கருத்துக்க ளுக்கும் ஊடகங்கள் முக்கிய இடம் கொடுத்து பரபரப்பாக அவற்றை வெளியிடுகின்றன.

அவையல்ல நிலைவரம், முதலில் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு 'ஒரு நாடு; ஒரு சட்டம்' என்ற கருத்தியல் எதைக் குறிக்கின்றது என்பது மக்களுக்குத் தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தாமல் அது பற்றி மாவட்டம் தோறும் மக்களுடன் உரையாடுவது என்பது "குருடன் யானையைப் பார்த்த கதை" மாதிரித் தான் முடியும்.

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்றால் என்ன? நாடு முழுவதும் ஒரே சட்டம், எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கும் என்பதா? அதாவது இனிமேல் வித்தியாசமான தரப்பினருக்கு வித்தியாசமான சட்ட ஒழுங்கு முறைகள் என்ற ஏற்பாடு ஏதும் இல்லையா? இப்போது சட்டவாக்கல் அதிகாரத் தின் சில பகுதிகள் மாகாண சபைகளுக்கு பாரப்படுத்தப் பட்டிருப்பதால் மாகாணங்களுக்கு மாகாணம் சில விட யங்கள் வேறுபட்ட சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. அது மாற்றப்படுமா? மாகாண சபைகளின் சட்டமாக்கும் தத் துவம் பறிக்கப்படுமா? – இவை எல்லாம் குறித்துத் தெளிவு படுத்தாமல் 'ஒரு நாடு;ஒரு சட்டம்' என்ற கோட்பாடு குறித்து மக்களுடன் பேசுவது என்பது குருடன் யானை பார்த்த கதை போன்றதுதான்.



# அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாடுகள் வருகின்றபோது அவர்களை வரவேற்போம்

## டக்ளஸ் திட்டவட்டம்

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எங் களிடம் நிதி வசதிகள் இல்லை வெளி நாடுகள் வரும்போது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற் படாத வகையில் யார் வந்தாலும் நாங்கள் வரவேற்போம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழுள்ள விவசாயிகளின் பிரச்சினை மற்றும் பல் வேறுபட்ட மாவட்டத்தின் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண் டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத் துத்தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரி வித்த அவர் –

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக உழவர் சந்தை அவசியம் தேவை என்பதை வலியுறுத்தி இருந்தார்கள். அதனை நடை முறைப் படுத்துவதற்கும் உடனடியாக நட வடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

கிளிநொச்சி கௌதாரி முனை பிரதேசத்தில் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு காற் றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்குரிய காணி வழங்குவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதி லளிக்கும் போது அவர் யாருக்கும் அவ்வாறு காணிகள் வழங்கப்படவில்லை எங்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி வசதிகள் இல்லை வெளிநாடு கள் வரும்போது நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் யார் வந்தாலும் அதனை நாங்கள் வரவேற் போம். – என்றும் அவர் குறிப்பிட் டிருந்தார்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய பங்களிப்பு வழங்குக புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அமெ.தூதரிடம் கோரிக்கை



இலங்கையில் நிலவும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான பங்களிப்பை வழங்குமாறு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி ஜியோன் சங்கிடம் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட மைக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து 6 புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் விடுத் துள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மறுக்க முடியாத அச்சுறுத்தல்கள் மற் றும் மோசமான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சாதகமான பங்களிப்பை வழங்குமாறு தமிழ் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வை அடைந்து கொள்ள, சர்வதேச மட்டத்திலான கண்காணிப்புடன் பொதுசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் இலங்கைக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை விடுத் துள்ளன.

# எரிபொருள் விலைச் சூத்திர நடைமுறை இருந்திருந்தால் விலை குறைந்திருக்கும்

## ருவான் சுட்டிக்காட்டு



எரிபொருள் விலை சூத்திரம் நடை முறையில் இருந்திருந்தால் பெற்றோலின் விலை தற்போது 130 முதல் 140 வரை இருந்திருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அன்று எரிபொருள் விலை சூத்திரத்தை கேலி செய்தவர்கள் இன்று ஏற்றுக்கொண் டுள்ளனர் என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

எரிபொருள் விலை கட்டுப்பாட்டுக்கு விலை நிர்ணய நிதியத்தை அமைப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருந்த நிலையில் அதற்கு என்ன ஆனது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

தற்போது மரக்கறிகளின் சராசரி விலை கிலோ 400 ரூபாவாக இருக்கும் அதேவேளை மிளகாயின் விலை 1000 ரூபாவாக உயர்ந் துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டுக்குள் காணப்படும் நெருக்கடிகளைத் தீர்க்கும் திறமை கொண்ட ஒருவரிடம் அரசாங்கம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் ருவான் விஜேவர்தன கூறினார்.

# பதவியேற்று 10 ஆண்டுகளை நிறைவுசெய்தார் வட கொரியத் தலைவர் கிம் ஜோங்



வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த வாரம் ஒரு முக்கிய ஆளும் கட்சிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொரியாவின் தொழிலாளர் கட்சியின், 8 ஆவது மத்திய குழுவின் 4 ஆவது முழுமையான கூட்டம் திங்கட்கிழமை கூட்டப்பட்டது.

தொற்றுநோய் எதிர்ப்பு முடக்கநிலை, அணு ஆயுதத் திட்டம் மற்றும் இயற்கை பேரழிவுகள் மீதான சர்வதேச தடைகள் ஆகியவற்றால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளை வட கொரியா எதிர்கொள்ளும் போது கட்சி மற்றும் அரசாங்க அதிகாரிகளின் கூட்டம் நடக்கின்றது.


இந்த வார சந்திப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தெரியவில்லை. ஆனால், 2019 இல், ஒரு முழுமையான கூட்டம் நான்கு நாள்கள் நடைபெற்றது.

கிம்மின் தந்தையும் நீண்டகால ஆட்சியாளருமான கிம் ஜோங் இல் டிசெம்பர் 2011இல் இறந்ததிலிருந்து, கிம் ஜோங் உன், நாட்டின் முழுமையான அதிகாரத்தை நிறுவி வட கொரியாவின் அணு மற்றும் ஏவுகணை ஆயுதங்களைப் பலப்படுத்தினார்.

2021ஆம் ஆண்டுக்கான பிரதான கட்சி மற்றும் மாநிலக் கொள்கைகளை செயற்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்வதற்காகவே இந்த முழுமையான கூட்டம் என்று கே.சி.எச்.ஏ. அறிக்கை தெரிவித்துள்ளது.

வடகொரியாவுடனான உறவுகளைக் கையாளும் தென் கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகம் திங்களன்று, 'வட கொரியா சர்வதேச சமூகத்துடன் உரையாடலுக்கான கதவைத் திறப்பதன் மூலம் புதிய ஆண்டை ஆரம்பிக்கும் என்று நம்புகிறோம்' எனத் தெரிவித்துள்ளது

# திபெத்தில் அதிகரிக்கும் கலாசார இனப்படுகொலை




திபெத்தின் மீதான சீனப் படையெடுப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி, சீன மொழி மற்றும் கலாசாரத்தைக் கற்று, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியை ஏற்க வேண்டும் என சீனா அழைப்பு விடுத்துள்ளது.

சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங், திபெத்தியர்களை அதிகாரபூர்வ சீன மொழியான மெண்டரின் மொழியைக் கற்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் புதிய நவீன சோசலிச திபெத்தையும், திபெத்திய மக்கள் சீன மயமாக வேண்டும் என்றும் கோரினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இமயமலைப் பகுதியில் தனது இரும்புக்கரங்களால் கலாசார இனப்படுகொலை செய்து வருகின்றது. வெகுஜன இணக்கத்தை உறுதி செய்வதாகக் கூறிக்கொண்டு தன்னாட்சி பிராந்தியத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி புதிய கொள்கைகளைச் செயற்படுத்தி வருகின்றது.

திபெத்தில், தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளில் இப்போது கோவில்களுக்குச் செல்வது மற்றும் ஜெபமாலை மணிகள், பிற மதப் பொருள்களைப் பயன்படுத்துவது ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவை தொடர்பில் கண்காணிப்புச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

கொள்கை ஆய்வுக்குழுவின் தகவல்களின் படி, பெய்ஜிங் இந்தச் சட்டங்களை மீறும் திபெத்திய பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் தொடர்பாக முறைப்பாடுகளை ஒவ்வொரு அலுவலகத்திலும் சமூகத்திலும் சிறப்பு முகவர்களை நியமித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் அல்லது நடைமுறைகளில் ஈடுபடும் எந்தவொரு நபரும் அரசாங்க ஊழியர்களாக இருந்தால் அதிலிருந்து நீக்கப்படுதல், அவருக்கான அனைத்து சிறப்பு உரிமைகளையும் மறுத்தல் மற்றும் கைது செய்யப்படுதல் உள்ளிட்டவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

நாட்டின் கலாசார மரபுரிமையை ஒழிப்பதற்காக, திபெத்திய மொழி இனி பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை என்றும் அதற்குப் பதிலாக, மெண்டரின் மொழி கற்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகளும் போலியாக முன்வைக்கப்படும் குற்றங்களுக்காகத் துன்புறுத்தப்பட்டு தண்டிக்கப்படுகின்றனர். மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, கல்வி அமர்வின் போது பணியாளர்களுடன் தர்க்கம் செய்ததற்காக இரண்டு துறவிகள் முறையே 17 மற்றும் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி திபெத்திய எழுத்தாளரும் கல்வியாளருமான கோ ரொப் கியாட்சோ, ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

திபெத்தின் மீது சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் படையெடுத்து அதன் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய பின்னர் 1951 முதல் இமயமலைப் பகுதியை சீனா ஆட்சி செய்து வருகிறது.

மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கலாசார ஒருங்கிணைப்பை நோக்கிய இத்தகைய நகர்வுகள் திபெத்தின் பாரம்பரிய பௌத்த கலாசாரத்தின் அழிவை உச்சரிக்கின்றன.

கடந்த 70 ஆண்டுகளில் திபெத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை வைத்துப் பார்த்தால், திபெத்தியர்களின் மகிழ்ச்சி அடைவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லாத நிலைமைகளே நீடிக்கின்றன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அமைப்பொன்றின் அறிக்கையில். 70ஆண்டுகால அடக்குமுறைக்குப் பிறகு, திபெத்திய மக்களுக்கு இன்று முதல் சீனாவின் மிருகத்தனமான செயற்பாடுகளில் இருந்து அமைதியான விடுதலை தேவைப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

பெய்ஜிங் தலாய் லாமாவை ஓர் ஆபத்தான பிரிவினைவாதி என முத்திரை குத்துகிறது, அதற்காக, தலாய் லாமாவை திபெத்தின் மிக உயர்ந்த மத நபராகப் பிரசாரம் செய்கின்றது. சீனாவின் கம்யூனிச ஆட்சிக்கு சவால் விடும் வகையில் திபெத்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்தின் அடையாளமாக தலாய் லாமா இருந்துள்ளார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடுத்த தலாய் லாமாவைத் தேர்ந்தெடுப்பதைக் கட்டுப்படுத்துவது முக்கிய விடயமாக உள்ளது.

இதனால், திபெத், ஜனாதிபதி ஷி உட்பட கட்சியின் உயர்மட்டத் தலைவர்களிடமிருந்து தொடர்ந்து கவனத்தைப் பெற்றது. சீனாவின் சோசலிச சமுதாயத்திற்கு ஏற்ப திபெத்திய பௌத்தம் வழிநடத்தப்பட வேண்டும் மற்றும் சீன சூழலில் வளர்க்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ஷி கடந்த ஆண்டு கூறினார்.

இந்த ஆண்டு மே மாதம், தலாய் லாமாவின் வாரிசு யாராக இருந்தாலும் பெய்ஜிங்கால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று சீனாவும் அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டது.

அந்த அறிக்கையின்படி, கம்யூனிஸ்ட் கட்சி சீனாவின் ஆளும் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு அடுத்த தலாய் லாமாவைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளில் களமிறங்கியுள்ளது.

இந்தியாவில் உள்ள திபெத்திய சமூகத்திற்குள் இருந்து தலாய் லாமா தனது வாரிசைத் தேர்ந்தெடுக்கலாம் என்பது சீனாவின் மிகப்பெரிய அச்சம்.

தலாய் லாமா திபெத்திற்கு வெளியே ஒரு வாரிசைக் கண்டால், சீனா நியமிக்கும் வாரிசு சட்டபூர்வமான தன்மையையும் திபெத்தில் பயனுள்ள செல்வாக்கைச் செலுத்தத் தேவையான ஆன்மீக அதிகாரத்தையும் அனுபவிக்க மாட்டார். இதுவே சீனாவின் அச்சத்துக்கு காரணமாக உள்ளது

# நிலவுக்கு மனிதனை அனுப்பும் திட்டங்களை தீவிரப்படுத்தும் ஜப்பான்!



ஜப்பான் தனது விண்வெளி ஆய்வுத்திட்டங்கள் தொடர்பான அட்டவணையை நேற்று செவ்வாய்க்கிழமை திருத்தி அமைத்துள்ளது. 2024 –ஆம் ஆண்டில் சந்திரனில் ஜப்பானியர் ஒருவரைத் தரையிறக்கும் நோக்குடன் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

விண்வெளி திட்டம் மக்களுக்கு நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை வழங்குவதற்கான திட்டம் மட்டுமல்ல. அது நமது பொருளாதாரத்துக்கு முக்கியமான அடித்தளத்தையும் வழங்குகிறது என ஜப்பானின் விண்வெளி பயணத் திட்டத்தை இறுதி செய்யும் கூட்டத்தில் பேசிய பிரதமர் புமியோ கிஷிடா கூறினார்.

விண்வெளி வீரர்களை சந்திரனுக்குத் திருப்பி அனுப்புவதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க தலைமையிலான ஆர்ட்டெமிஸ் (Artemis) திட்டத்தின் ஒரு பகுதியாக முதல் ஜப்பானியரை நிலவில் தரையிறக்குவதை நோக்கமாகக் கொண்டு ஜப்பான் திட்டங்களை வகுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்கான ஜப்பானின் அபிலாஷைகளையும், விண்வெளியில் சூரிய மின்சக்தியை உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டறியவும் இந்தத் திட்டம் வழிவகுக்கும் எனவும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜப்பானின் அண்டை நாடான சீனாவும் 2030 ஆம் ஆண்டில் ஒரு பெரிய விண்வெளிப் பயண சக்தியாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அத்துடன், விண்வெளி வீரர்களை சந்திரனில் களமிறக்க சீனாவும் திட்டமிட்டுள்ளது. இது ஆசிய விண்வெளிப் போட்டியை அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# மேலும் இரு கொரோனாத் தடுப்பூசிகளுக்கு இந்திய மத்திய சுகாதாரத்துறை அனுமதி

இந்தியாவில் கொரோனாப் பரவல் கட்டுக்குள் இருந்த நிலையில், ஒமிக்ரோன் வைரஸ் பாதிப்பு அண்மைய நாள்களில் அதிகரித்து வருவ தால் தடுப்பு நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. பல்வேறு மாநிலங்கள் இரவு நேர ஊரடங்கை அறிவித்துள்ளன. ஒமிக்ரோன் வைரஸ் பாதிப்புக்கு உள்ளான வர்களுக்கும் கொரோனாவுக்கான சிகிச்சையே அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத் தின் கீழ் செயற்படும் மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு, மேலும் இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளை அவசர பயன்பாட் டுக்கு உபயோகிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஏற்கனவே கோவாக்சின் மற்றும் பொவிஷீல்ட் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில், புதிதாக கோவோ வாக்ஸ் மற்றும் கோபெவாக்ஸ்ஆகியதடுப்பூசிகளுக்கும்அனுமதிவழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, மோல்னு பிரவீர் என்ற தடுப்பு மருந் தையும் அவசர காலத்திற்கு பயன்படுத்தி கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்திய மத்திய சுகாதாரத்துறையின் முன்னேற் பாடான நடவடிக்கைகளை அத்துறையின் அமைச்சர் மனுசுக் மாண்டவியா பாராட்டியுள்ளார்.

# இந்திய அடித்தளத்தின் மீதே தாக்குதல் சோனியா காந்தி கடுங்குற்றச்சாட்டு!

காங்கிரஸ்கட்சிதோற்றுவிக்கப்பட்டதன் 137 ஆவது ஆண்டுக் கொண்டாட்டம் டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சோனியாகாந்தி, மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசின் கொள்கைகளை மறை முகமாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

இந்திய ஜனநாயகத்தையும், கலா சாரத்தையும் காங்கிரஸ் தொண்டர்கள் பாதுகாக்கவேண்டும். காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல, அது ஓர் இயக்கம். அதன் தலைவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு இன்னல்களைச் சந்தித்துள் ளனர். சிறைத் தண்டனையை அனுபவித் துள்ளனர். தங்கள் வாழ்வையே அவர்கள் இழந்துள்ளனர்.

ஆனால், நாட்டைப் பிளவுபடுத்தும் வெறுப்பு மற்றும் பிரிவினைச் சிந்தாந்த வாதிகளுக்கு சுதந்திரப் போராட்டத்தில் எந்தப் பங்கும் இல்லை. தற்போது அந்தச் சிந்தாந்தம் நமது சமூகத்தின் மதச்சார்பற்ற கட்டமைப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு அதன் மதிப்புத் தெரிவதில்லை.

இந்திய அடித்தளத்தின் மீதே தாக்குதல் நடத்தும் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றன. நமது பண்பாடு சிதைக்கப்படுகிறது. பொதுமக்கள் பயம் மற்றும் பாதுகாப்பில்லா உணர்வுடன் வாழ்கின்றனர், என்று சோனியா காந்தி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



# இந்தியப் பிரதமர் மோடியின் பாதுகாப்புக்கு அதிநவீன பாதுகாப்பு கார்கள் கொள்வனவு




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சுற்றுப் பயணங்களின்போது அவருக்குப் பாதுகாப்பு அளிக்க நவீன கார்கள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. இப்போது கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய மெர்சிடஸ் மேபக் எஸ் 650 ரக கார்கள் வாங்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது. இந்தக் கார்களில் வி.ஆர்10 என்ற உயர் ரக பாதுகாப்பு அம்சம் உள்ளது.

உலகெங்கும் தயாரிக்கப்படும் கார்களில், மிக உயர்ந்த பாதுகாப்பு அம்சம் கொண்ட கார் இதுவாகும் என்றும், பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வகைக் கார்கள் வாங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெர்சிடஸ் மேபக் எஸ் 650 ரக கார்கள் ஏ.கே 47 துப்பாக்கி தோட்டாக்களின் தாக்குதலையும் தாங்கும் சக்தியைக் கொண்டவையாகும். வெடிகுண்டு தாக்குதலில் இருந்தும் இவற்றினால் பாதுகாப்பு கிடைப்பதோடு, விபத்து ஏற்பட்டால் தானாக பெற்றோல் தாங்கி மூடிக்கொள்ளும் ஏற்பாடும் இதில் உள்ளது. இதேபோல், வி வாயுத் தாக்குதல் நடத்தப்பட்டால் சுவாசிக்க ஏதுவாக செயற்கை சுவாசக் கருவியும் இதில் உள்ளது. இந்தக்காரின் டயர்கள் ஆபத்து நேரங்களில் பாதிப்படைந்தாலும் தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டவையாகும்.

ரஷ்ய அதிபர் விளாடி மிர் புடின் சமீபத்தில் இந்தியா வந்தபோது இந்தக் கார்களே இந்தியப் பிரதமரின் பயன்பாட்டிற்காக டெல்லியில் உள்ள ஹைதராபாத் விருந்தினர் இல்லத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் இதுபோன்ற இரண்டு கார்களை பயன்படுத்துகின்றனரென்றும், ஒரு காரின் விலை 12 கோடி ரூபா என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு கடற்கரையில் கூடுவதற்குத் தடை!



ஒமிக்ரோன் தொற்று பரவலால் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கு தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.

அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளை மக்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும் என தமிழக டி.ஜி.பி. சைலேந்திர பாபு தெரிவித்திருக்கிறார்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள கடற்கரை களில் 31ஆம் திகதி இரவு பொதுமக்கள் கூடி புத்தாண்டு கொண்டா டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். பொது இடங்களில் அனுமதி இல்லாததால் அனைவரும் புத்தாண்டை அவரவர் குடும்பத்தினருடன் வீடுகளிலேயே கொண்டாடுங்கள் என்றும் அவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

புத்தாண்டுக் கொண்டாட்டம் என்ற பெயரில் பொது இடங்களில் அமைதிக்குக் குந்தகம் விளைவித்தால் பொலிஸார் தக்க நடவடிக்கை எடுப்பர் என்றும், மது அருந்திவிட்டுவாகனங்களை இயக்கக்கூடாது எனவும் மீறினால் கைது செய்யப்பட்டு, வாகனமும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மது அருந்தவோ, அருந்திவிட்டோ வராதீர்கள் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வலியுறுத்து

பீகார் மாநிலத்தில் பூரண மது விலக்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக அமுலில் உள்ளது. நாட்டுச் சாராயம் காய்ச்சினால், அது கள்ளச் சாராயம் என அறிவிக்கப்பட்டு மரண தண்டனை விதிப்பதற்கும் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பொது இடங்களில் மது குடித்தால் 7 ஆண்டுகளும், இருப்பிடங்களில் குடித்துவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தால் 5 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதிப்பதற்கும் சட்டமியற்றப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார், எமது மாநிலத்துக்கு வருபவர்கள், தங்களுக்குக் கொஞ்சமாகவேனும் மது அருந்த அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால், அது சாத்தியமா? அவர்களை மது அருந்த அனுமதிப்போமா? பிற மாநிலங்களில் இருந்து வருபவர்களை மது அருந்த அனுமதிப்பீர்களா? எனக் கேட்டால், அப்படிப்பட்டவர்கள் பீகாருக்கு வராதீர்கள் என்பதுதான் எனது பதிலாக இருக்கும். மது அருந்துபவர்கள் பீகாருக்கு வரவேண்டிய அவசியமில்லை.

மாநிலத்துக்கு வெளியே மது அருந்திவிட்டு நுழைய விதிக்கப்பட்ட தடையையும் தளர்த்தும் எண்ணமில்லை. மதுவிலக்கு விதிப்பதற்கான எங்களது அரசின் முடிவு மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. ஒருவர் மது அருந்தினால் அவர் எவ்வளவு படித்தவராகவும், அறிவாளியாகவும் இருந்தாலும் அத்தகையவர்கள் திறமையானவர்களாகக் கருதப்படமாட்டார்கள் - என்றார்.

# வடக்கு கிழக்கு இணைக்கப்பட கூடாது ஐக்கிய காங்கிரஸ் கட்சி போராட்டம்



வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவித்து ஐக்கிய காங்கிரஸ் கட்சி எதிர்ப்பை வெளியிட்டு போராட்டம் நடாத்தியுள்ளது.

நேற்று ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கல்குடாத்தொகுதி அமைப்பாளர் சல்மான் வஹாப் தலைமையில் மட்டக்களப்பு ஓட்ட மாவடியில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு சுலோகங்களை எதிர்ப்பாளர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது வடக்கு கிழக்கை இணைப்பதற்குத் துணை போகும் முஸ்லிம் காங்கிரஸின் துரோகத்தனத்தை கண்டிக்கின்றோம், கிழக்கு தலைமைகளின் அனுமதியற்ற தீர்வுகளை ஏற்க மாட்டோம், வடக்கு கிழக்கை இணைக்காதே போன்ற வாசகங்களுடன் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

மேலும் வடக்கு கிழக்கு இணைவிற்கு எதிராக ஐக்கிய காங்கிரஸ் கட்சியினால் தேசிய மட்டத்தில் ஊடக மாநாடுகளும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துப்பட்டு வருகின்றன என கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

## நல்லூர் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய பொடி அப்புக்காமி விஜயதாஸ என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மூன்று தினங்களாக காணாமல் போயிருந்த நிலையில் நல்லூர் ஆற்றங்கரை வீதியில் அமைந்துள்ள பழைய வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் சம்பூர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சடலத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் விபத்தில் குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு – கொழும்பு ரயில் விபத்தில்இளம் குடும்பஸ்தரரான ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.இந்தச் சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இரவு 8.30 மணியளவில் ஏறாவூர் – ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 29 வயதுடைய ரட்ணகுமார் டினேஷ்ராஜ் என்பவரே உயிரிழந்தார் என அடையாளங் காணப்பட்டுள்ளது.

மேசன் தொழிலாளியான இவர் தனது உறவினர் ஒருவரை சந்திப்பதற்காக ரயில் பாதையைக் கடக்கும் போது ரயிலில் மோதி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## இன்னல்களுக்கு உள்ளானவர்களுக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கல்



நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்குள்ளான அலுவலகத்தால் இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நிகழ்வில் கலந்துகொண்டு இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு காசோலைகளை வழங்கிவைத்தார்.

இதன்போது கடந்த காலங்களில் இன்னல்களுக்குள்ளான ஆலயங்கள் மற்றும் நபர்களுக்காக 25 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி காசோலைகளாக வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பாதிப்பிற்குள்ளான 07 ஆலயங்களுக்கும், உயிரிழப்பிற்குள்ளான மற்றும் காயமடைந்த 14 நபர்களுக்கும் மேலும் சொத்துப் பாதிப்பிற்குள்ளான 9 நபர்களுக்கும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

## வாழைச்சேனையில் வீடு கையளிப்பு

வாழைச்சேனை 77'தோட்ஸ் போர் கோப்' அமைப்பு மற்றும் மட்டக்களப்பு லயன்ஸ் கழக உறுப்பினர்களின் நிதி அனுசரணையுடன் இராணுவத்தினரின் கட்டுமான பணிகளுடன் வீடு ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

நாளாந்தம் இடியப்பம் வியாபாரம் செய்து வந்த 4 குடும்ப அங்கத்தவர்களை கொண்டமைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வந்த வீடு அதன் கூரை மற்றும் கட்டடத்தின் பல பாகங்கள் சேதமடைந்து வாழமுடியாதபடி காணப்பட்டுள்ளது.

மழை காலங்களில் தரையில் உறங்கி நித்திரை கொள்ள முடியாமல் கதிரையில் இருந்து உறங்கி வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். இவர்களது அவல நிலமையை அறிந்த 77'தோட்ஸ் போர் கோப்' அமைப்பின் உறுப்பினர்கள் எடுத்த முயற்சியால் இவ்வாறனதொரு நன்மையான செயற்பாடு நடந்தேறியுள்ளது.



## தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது மருதமுனை இளைஞர் அமைப்பாளர் கருத்து



தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது . அவர்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வரும் வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதன் மூலம் வடக்கு கிழக்கு இணைப்பால் தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம் மேலோங்கும் என்பதே வெளிப்படை உண்மையாகும் என தேசிய காங்கிரஸின் மருதமுனை இளைஞர் அமைப்பாளர்சமட்ஹமீட்தெரிவித்தார்..

அதேநேரம் கிழக்கில் 34 சதவீதத்தை பெற்று ஓரளவு அரசியல் அதிகாரத்தோடு இருக்கும் முஸ்லிம் சமூகம் மாகாணங்களின்இணைப்பின் மூலம் வடக்கு கிழக்கில் 17 சதவீதமாக மாறும்.

இந்த நேரம் தேர்தல் நடந்தால் முஸ்லிம் சமூகம் ஆளும் தரப்பாகவோ. எதிர் தரப்பாகவோ வரமுடியாமல் போகும். முஸ்லிங்களின் அரசியல் அதிகாரம் நிர்மூலமாகும். இணைக்கப்படாத கிழக்கில் தேர்தல் நடந்தால் ஆட்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய பொறுப்பில் முஸ்லிம் சமூகம் காணப்படும் எனவும் ஹமீட் தெரிவித்தார்.

# சிம்பாப்வே – இலங்கை அணிகள் விளையாடும் ஒருநாள் போட்டித்தொடர் ஜனவரி 10 இல் ஆரம்பம்



சிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி இலங்கை வந்தடையவுள்ள சிம்பாப்வே அணியானது, ஜனவரி 16 ஆம் திகதி முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கையணியோடு மோதவுள்ளது. இரண்டாவது போட்டி 18 ஆம் திகதியும், மூன்றாவது ஒருநாள் போட்டி 21 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரின் போட்டிகள் அனைத்தும் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு போட்டிகளாக நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருநாள் தொடரானது, ஐ.சி.சி. ஒருநாள் சுப்பர் லீக்கின், இலங்கை அணிக்கான முதல் தொடராக அமையவுள்ளது. இந்தப் போட்டித்தொடர் உயிரியல் பாதுகாப்பு வலயத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளோடு நடத்தப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்தப் போட்டித்தொடரை நேரடியாகப் பார்வையிடுவதற்கு ரசிகர்கள் மைதானத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சம்பியனாகியது இலங்கை ஆடவர் கரபந்தாட்ட அணி

## இலங்கை மகளிர் அணிக்கு மூன்றாமிடம் கிடைத்தது

பங்கபந்து ஆசிய மத்திய வலய ஆடவர் கரபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் பங்களாதேஷ் அணியை 3:0 என வீழ்த்திய இலங்கை அணி சம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டது.

பங்களாதேஷில் நடைபெற்றுவந்த இந்தப் போட்டித்தொடரில் இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவுகள், நேபாளம், கிர்கிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்றி ருந்தன. லீக் சுற்றில் மாலைதீவுகள், உஸ் பெகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளை வீழ்த்திய இலங்கை அணி இறுதிப்போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டது.

தொடரின் பலமான அணியென்ற ரீதியில் களமிறங்கிய இலங்கை அணி, இறுதிப் போட்டியிலும் அபாரமாக விளையாடியிருந்தது. பங்களாதேஷ் அணியும் பலமான எதிர்ப் பாட்டத்தை வெளிப்படுத்த, இரண்டு அணிகளும் ஒரு கட்டத்தில் 23:23 புள்ளிகள் பெற்று சம நிலையிலிருந்தன. இலங்கை வீரர்கள் விடாது போராட, 28-26 என்ற புள்ளிகள் கணக்கில் முதல் செட்டை கைப்பற்றமுடிந்தது.

பின்னர் ஆரம்பித்த இரண்டாவது செட்டிலும், இலங்கை அணி 25:20 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவது செட்டில், பங்களாதேஷ் அணி தீவிரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி யது. ஆனாலும், விடாது தங்களுடைய திறமையான ஆட்டத்தைக் கைக்கொண்டு மிகச்சிறப்பாக விளையாடி செட்டை 25:20 என கைப்பற்றிக் கொண்ட இலங்கை அணி 3:0 என போட்டியில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதேவேளை, பெண்களுக்கான மூன்றாவது இடத்துக்கான போட்டியில், கிர்கிஸ்தான் அணியை 3:0 என்ற செட்கள் கணக்கில் வீழ்த் திய இலங்கை மகளிர் அணி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இளையோர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷ் – இலங்கை போட்டி கைவிடப்பட்டது



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகின்ற இளையோர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில், இலங்கை 19 வயது கிரிக்கெட் அணி மற்றும் பங்களாதேஷ் 19 வயது கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான குழுநிலைப் போட்டி கொவிட்-19 வைரஸ் அச்சம் காரணமாக கைவிடப்பட்டிருக்கின்றது.

இலங்கை, பங்களாதேஷ் நாடுகளின் 19 வயது கிரிக்கெட் அணிகள், குழு பியில் இடம்பெற்றுள்ளன. நேற்று நடைபெறவிருந்த போட்டி, அந்தக் குழுவில் முதலிடம் பெறுகின்ற அணியினையும் அரை யிறுதியில் எந்த அணி யோடு மோதவுள்ளன என்பதையும் தீர்மானிக் கின்ற முக்கியத்துவமிக்க போட்டியாக அமைந்தி ருந்தது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 130 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து விளையாடிக் கொண்டிருந்தபோது போட்டி இடைநிறுத்தப்பட்டிருந்தது. நடுவர்கள் குழாமில் இருவருக்கு கொவிட்19 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து ஆட்டம் முழுமையாகக் கைவிடப்பட்டிருக் கின்றது.

இதையடுத்து ஓட்ட சராசரியில் இலங்கை யைவிட சற்று முன்னேயுள்ள பங்களாதேஷ் அணி, இந்தியாவையும், இலங்கையணி பாகிஸ்தானையும் அரையிறுதிப்போட்டிகளில் சந்திக்கவுள்ளன.



# அரசின் மீது நாட்டு மக்கள் கடும்கோபத்தில் உள்ளனர்!

## ரணில் விக்கிரமசிங்க எடுத்துரைப்பு

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருக்கின்றனர் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், நாட்டில் டொலர் பற்றாக்குறை, வேலைவாய்ப்பு இன்மை, விவசாயிகள் பிரச்சினைகள் காணப்படுகின்றன எனக் கூறினார்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், பல நாடுகள் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பொருளாதார முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடி உதவி பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்று வழியை முன்வைக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



எதிர்வரும் புத்தாண்டில் உணவுப் பற்றாக் குறை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் கடும் கோபம் ஏற்படும் என்றும் அது அரசாங்கத்தை பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

# ஜனாதிபதியின் கருத்துக்களை சுற்றறிக்கைகளாக ஏற்றமையின் விளைவே பின்னடைவுக்குக் காரணம்!

## கயந்த கருணாதிலக்க காட்டம்




அரசாங்கம் தற்போது தமது தவறுகளை அதிகாரிகளின் மீது சுமத்தி தப்பித்துக்கொள்ள முனைகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் –

தன்மீது குறைபாடுகளை வைத்துக்கொண்டு பொதுமக்களை அரசாங்கம் குற்றம் சாட்டுவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கருத்துக்களை சுற்றறிக்கை களாக ஏற்றுகொண்டு அதன்படி அமைச்சின் செயலாளர்கள் செயற்பட்டமையின் விளைவே இந்தப் பின்னடைவுக்குக் காரணம் எனக் கூறினார்.

குறிப்பாக இரசாயன உரத்துக்குப் பதிலாக இயற்கை உரங்களை அமுல்படுத்துவதற்கு விவசாய அமைச்சு ஆதரவை வழங்கவில்லை என்றும் கயந்த கருணாதிலக்க சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் பலவீனமான நிதி முகாமைத்துவதால் டொலர் நெருக்கடி ஏற்பட்டிருந்தாலும் எரிபொருள் விலையைக் குறைப்பதைத் தவிர்க்க அரசாங்கம் இதனை ஒரு சாக்குப்போக்காகப் பயன்படுத்துவதாக கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பிரதேச சபை மற்றும் மாகாண சபை தேர்தல்களை பிற்போடுவதற்கான செயற்பாடுகளையே அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

# சுமார் 70 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இம்மாதம் இதுவரை நாட்டுக்கு வருகை

டிசெம்பர் மாதம் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 70 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மன், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என அந்த சபையின் பணிப்பாளர் நாயகமான தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீதத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜனவரியில் சுமார் 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு டொலர் இன்மை

## 2022 ஆம் ஆண்டில் பாரிய மின் தட்டுப்பாடு?

நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு டொலரைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால், 2022ஆம் ஆண்டில் பாரிய மின் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை எச்சரித்துள்ளது.

ஜனவரி 24ஆம் திகதி வரை எரிபொருள் கையிருப்பில் உள்ளதால், மின்சார சபைக்கு பிரச்சினை இல்லை என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரான எம்.ஆர். ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதியை இலங்கை மின்சார சபை பெற முடியாவிட்டால், மின் உற்பத்தியில் பாரிய பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்கள் - அதிபர்களுக்கு ஜனவரி முதல் சம்பள உயர்வு!

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சம்பள உயர்வுக்கான நடவடிக்கைகள் சம்பளம் மற்றும் ஊதிய ஆணைக்குழு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சின் செயலாளரான பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

# நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத் தளபதி!



யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ கட்டளைத் தளபதி நேற்று (செவ்வாய்க்கிழமை) மரியாதை நிமித்தம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நல்லை ஆதீனத்துக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) விஜயம்செய்த யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியை நல்லை ஆதீன குருமுதல்வர் பொன்னாடை போர்த்தி வரவேற்றதோடு இராணுவத் தளபதியால் நல்லை ஆதீன குருமுதல்வருக்கு நினைவு பரிசும் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த நல்லை ஆதீன குரு முதல்வர் –

புதிதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பதவி ஏற்றுள்ளவர் என்னை மரியாதை நிமித்தம் சந்தித்தார் . அவர் புத்தாண்டுக்காக என்னை வந்து சந்திப்பதாகத் தெரிவித்திருந்தார்.

தற்போதைய யாழ். மாவட் நிலை தொடர்பில் விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டதோடு அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்து விக்கிரகங்கள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்படுவதை தடுத்து நிறுத்துமாறும் கோரியுள்ளேன்.

அத்துடன் எதிர்வரும் தைப்பொங்கல் உற்சவத்தை இந்து மக்கள் அனைவரும் சுதந்திரமாகக் கொண்டாடுவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் கிராமங்களில் ஆலய வழிபாட்டுக்கு இராணுவத்தால் இடையூறு ஏற்படாதவாறு செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தேன். குறிப்பாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களுக்குச்சென்று பொதுமக்கள் தமது வழிபாடுகளையும் மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச்செய்து தருமாறும் எதிர்வரும் புத்தாண்டு நிகழ்வை பொது மக்கள் பட்டாசு கொளுத்தி சுதந்திரமாகக் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் –

தற்போதைய நிலையில் இனங்களுக்கிடையில் விரிசல் நிலை ஏற்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இது தொடர்ந்தால் பெரிய ஒரு பிரச்சினையாக உருவெடுக்கும். அதனை நிறுத்துவதற்குத் தங்களாலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற ஐந்து கோரிக்கைகளையும் இன்றைய சந்திப்பின் போது நான் எடுத்துரைத்தேன். அதற்கு பதில் அளித்த இராணுவ கட்டளைத் தளபதி, இவை தொடர்பில் தான் உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி எடுப்பதாகவும் தெரிவித்தார். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2021இல் வெளியிடப்பெற்றது.